# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 77/பேரூ/2023**
**நாள் : 06.06.2023**

திரு.இரா.இளவரசு,
கெங்கவல்லி,
சேலம் மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
கெங்கவல்லி பேரூராட்சி
சேலம் மாவட்டம் .... எதிர்மனுதாரர்

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், ஆத்தூர் மெயின் ரோடு கதவு எண்.167/d என்ற முகவரியைச் சேர்ந்த திரு. இரா.இளவரசு என்பவரது 18.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.03.2023 அன்று பெறப்பட்டு, 77/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சேலம் மாவட்டம், கெங்கவல்லி பேரூராட்சி, ஆத்தூர் மெயின் ரோடு கதவு எண்.167/d என்ற முகவரியைச் சேர்ந்த திரு. இரா.இளவரசு என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"சேலம் மாவட்டம், கெங்கவல்லி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட கல் ஒட்டர் தெரு அதாவது பழைய வார்டு எண்.2, புதிய வார்டு எண். 4ல் சுமார் 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒப்பந்தம் விடப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கு சாக்கடை கழிவு நீர் கால்வாய் மற்றும் தார் சாலை அமைக்கப்பட்டிருப்பதாக கெங்கவல்லி பேரூராட்சி அலுவலக கோப்புகளில் கணக்கு உள்ளது. இப்பணிகளுக்காக ஒப்பந்ததாருக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தற்சமயம் மேற்குறிப்பிட்ட தெருவில் கெங்கவல்லி பேரூராட்சி நிர்வாகத்தின் சார்பாக அமைக்கப்பட்ட சாக்கடை கழிவுநீர் கால்வாய் மற்றும் தார்சாலை, இதில் தார்சாலையை மட்டும்

அமைக்கபடாமலேயே அமைக்கப்பட்டதாக போலியான ரசீது தயார் செய்து பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அரசு பணத்தை கையாடல் செய்துள்ளனர். ஆகவே எங்கள் புகார் மனு மீது விசாரணை செய்து மேற்படி தார்சாலை அமைத்துத் தரும்படியும், அரசு பணத்தை கையாடல் செய்த அலுவலர்கள் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த உயர் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்".

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கெங்கவல்லி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) கெங்கவல்லி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 22.05.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

" மனுதாரர் தனது மனுவில் கெங்கவல்லி பேரூராட்சியில் 2வது வார்டு கல்ஒட்டர் தெருவில் தார்சாலை அமைக்கப்படாமல் தொகை எடுக்கப்பட்டது என தெரிவித்துள்ளது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் 15.02.2021 நாளிட்ட ஆணையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிக்கு பெத்தநாய்க்கன்பாளையம் தொகுப்பு இளநிலை பொறியாளரால் 400 மீட்டர் தார்சாலை அமைக்கவும் 140 மீட்டர் கழிவுநீர் வடிகால் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு தருமபுரி பேரூராட்சிகள் மண்டல செயற்பொறியாளரின் நடவடிக்கை ந.க. எண். 637/2018.பே1 நாள் 6.02.2021–ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தார்சாலை அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு ந.க.எண். 103/2021, நாள் 17.02.2021ல் ஒப்பந்த புள்ளி கோரும் அறிவிப்பு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு அனுப்பப்பட்டது. அதன்படி 24.02.2021ம் தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதிபெற்ற ஒப்பந்தார் திரு. பெ. சேகர் என்பவருக்கு கெங்கவல்லி பேரூராட்சி மன்ற தீர்மான எண். 282 (1) நாள் 26.02.2021ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் என்ற அடிப்படையில் கெங்கவல்லி பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படி பேரூராட்சியின் உத்திரவு ந.க.எண். 103/2021 நாள் 26.02.2021ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

ஒப்பந்ததாரரால் 13வது வார்டு கன்னிகா பரமேஸ்வரி மண்டபம் ரோடு 190 மீட்டர் மற்றும் 13வது வார்டு சக்தி நகர் பகுதியில் 90 மீட்டர் மொத்தம் 280 மீட்டர் தார்சாலை அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டது. மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள 2வது வார்டு கல்ஒட்டர் தெருவில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் அமைந்துள்ள 15 அடி அகல பாதையில் 3 அடி அகலத்தில் 120 மீட்டர் நீளத்தில் கழிவுநீர் வடிகால் அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டது. மேலும் 2வது வார்டு கல்ஒட்டர் தெருவில் கழிவுநீர் வடிகால் அமைக்கப்பட்டது போக மீதமுள்ள 12அடி அகலம் மட்டும் பாதை உள்ளதால் தார்சாலை அமைக்கும் இயந்திரம் செல்ல இயலாத நிலை ஏற்பட்டதால் மேற்படி தார்சாலை அமைக்கும் பணி செய்ய வழிவகை இல்லை. அதற்கு பதிலாக பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தி வரும் பேரூராட்சிக்கு சொந்தமான

சாலையில் 120 மீட்டர் தார்சாலை அமைக்கப்பட்டு திட்டப் பணிகள் செய்து முடிக்கப்பட்டது.

ஒப்பந்ததாரரால் செய்யப்பட்ட பணியினை பெத்தநாயகன்பாளையம் தொகுப்பு பொறியாளரால் அளவீடு செய்யப்பட்டு, அளவுபுத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு பேரூராட்சிகள் தருமபுரி மண்டல செயற்பொறியாளரால் மேல் அளவீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பெத்தநாயகன்பாளையம் தொகுப்பு பொறியாளரால் தயாரிக்கப்பட்ட பட்டியல் மற்றும் பணி நிறைவு பட்டியல் ஆகியவை தருமபுரி பேரூராட்சிகள் மண்டல செயற்பொறியாளரால் மேலொப்பம் செய்யப்பட்ட பின்னர் ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை காசோலை மூலம் வழங்கப்பட்டது. எனவே மனுதாரர் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டவாறு பணி செய்யாமல் பட்டியல் தயாரித்து தொகை வழங்கப்பட்டுள்ளது என்பது உண்மைக்கு மாறானது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்திற்கு 08.05.2023 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. பேரூராட்சியின் செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தின் 8.5.2023 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. மனுதாரர் மட்டும் 08.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-

"சேலம் மாவட்டம், கெங்கவல்லி பேரூராட்சியின் பேரூர் 11வது வார்டு மன்ற உறுப்பினராக உள்ளேன். மேற்கண்ட கெங்கவல்லி பேரூராட்சியின் வார்டு எண் 4ல் சாக்கடை வசதி, கழிவு நீர் கால்வாய் மற்றும் தார் சாலை அமைத்திட ரூபாய் 9 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தம் விடப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளன. மேற்கண்ட ஒப்பந்தப் பணியில் குறிப்பிடப்பட்டுள்ள தார் சாலை மட்டும் அமைக்கப்படாமலேயே, தார் சாலை அமைக்கப்பட்டதாக தெரிவித்து போலியான ரசீது தயார் செய்து பணத்தை கையாடல் செய்துள்ளனர். இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட தார்சாலை அமைத்துள்ளதாக பேரூராட்சியின் அளவீட்டு புத்தகத்திலும் (MBook) இது குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் நகல்கள் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது."

எனவே தார்சாலை அமைக்காமலேயே அமைத்ததாகக் கூறி பணத்தை பேரூராட்சி அலுவலர்களால் கையாடல் செய்யப்பட்டது குறித்து தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பான புகைப்பட நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

5) கெங்கவல்லி பேரூராட்சி செயல் அலுவலர் மருத்துவ விடுப்பில் இருந்தது தொலைபேசி மூலம் அறியப்பட்டு, இம்முறைமன்ற நடுவத்தில் 16.05.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 12/5/2023 நாளிட்ட இம்முறைமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேலும் கெங்கவல்லி பேரூராட்சி இளநிலை பொறியாளருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் மேற்படி இளநிலைப் பொறியாளர் 16.5.2023 அன்று நடைப்பெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

கெங்கவல்லி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பதிவறை எழுத்தர் ஆகியோர் 22.05.2023 அன்று இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்:-

"சேலம் மாவட்டம், கெங்கவல்லி பேரூராட்சியில் செயல் அலுவலராக கடந்த மூன்று மாத காலமாக பணியாற்றி வருகிறேன். கெங்கவல்லி பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் கட்டமைப்பு நிதி 2020–2021 திட்டத்தின் கீழ் கழிவுநீர் வடிகாலுடன் தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூபாய் 30 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மனுதாரர் குறிப்பிட்டுள்ள 2வது வார்டு கல்ஒட்டர் தெருவில் கழிவு நீர் வடிகால் அமைக்கப்பட்டது. ஆனால் அங்கு 12 அடி அகலம் கொண்ட பாதை உள்ளதால், தார்சாலை அமைக்கும் இயந்திரம் அங்கு செல்வதற்கு வழிவகை இல்லாத நிலையில், அளவீட்டுப் புத்தகத்தில் (M Book) பதிவுசெய்துள்ளதன்படி அங்கு மேற்கண்ட தார்சாலை அமைக்கும் பணிகள் நடைபெறவில்லை. மேற்கண்ட கல்ஒட்டர் தெருவில் தார்சாலை அமைப்பதற்கு பதிலாக பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்திவரும் அருகில் உள்ள சாலையில் 120 மீட்டர் தார்சாலை அமைக்கப்பட்டு திட்டப் பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இது குறித்து அளவீட்டுப் புத்தக்த்தில் குறிப்பு இல்லை. மேற்கண்ட அளவீட்டுப் புத்தகத்தின் நகல் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. மேற்கண்ட பணியை மேற்கொள்ளும்போது பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அல்லது வேறு உயர் அலுவலர்களிடம் எவ்வித முன் அனுமதியோ அல்லது பணிகளை மேற்கொண்டதற்கான பின்னேற்போ பேரூராட்சியால் பெறப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட பணிகளை மேற்கொண்டமைக்கான பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுவிட்டது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் எங்களால் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் 22.5.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்."

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் கெங்கவல்லி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் செயல் அலுவலர் மற்றும் பதிவறை எழுத்தர் ஆகியோரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (மற்றும்) விதிகளில் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு 7 " The Ombudsman shall perform all or any of the following functions namely:-

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மனுதாரர் தனது மனுவில், சேலம் மாவட்டம், கெங்கவல்லி பேரூராட்சி கல்ஒட்டர் தெருவில் சுமார் 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒப்பந்தம் விடப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சாக்கடை கழிவுநீர் கால்வாய் மற்றும் தார்சாலை அமைக்கப்பட்டிருப்பதாக பேரூராட்சி அலுவலக கோப்புகளில் கணக்கு உள்ளது. இப்பணிகளுக்காக ஒப்பந்ததாருக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது; ஆனால் மேற்குறிப்பிட்ட தெருவில் தார்சாலை அமைக்கப்படாமலேயே போலியான ரசீது தயார் செய்து பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் உயர்அதிகாரிகள் அரசு பணத்தை கையாடல் செய்துள்ளனர். எனவே புகார் மனு மீது விசாரணை நடத்தி தார்சாலை அமைத்துத் தரும்படியும், அரசு பணத்தை கையாடல் செய்த அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் புகார் அளித்துள்ளார்.

கெங்கவல்லி பேரூராட்சி அலுவலக ஆவணங்களைக் கொண்டு இந்நேர்வினை ஆய்வு செய்ததில் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் 15.2.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி கெங்கவல்லி, கல்ஒட்டர் தெரு, வார்டு எண். 2, ஆத்தூர் மெயின் ரோடு கன்னிகாபரமேஸ்வரி மண்டபம் மற்றும் சதிநகர் வார்டு எண் 13 ஆகிய இடங்களில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கும் பணிகள் ஒப்புதல் வழங்கப்பட்டு, 16.02.2021 நாளிட்ட பேரூராட்சிகளின் தருமபுரி மண்டல செயற் பொறியாளர் அவர்களின் நடவடிக்கைகள் எண் 637/2018/பே.1–ன்படி ஆணைகள் வழங்கப்பட்டு அதனடிப்படையில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. கெங்கவல்லி பேரூராட்சி செயல் அலுவலர் தமது விளக்க அறிக்கையில் 2வது வார்டு கல்ஒட்டர் தெருவில் கழிவுநீர் வடிகால் அமைக்கப்பட்டது போக மீதமுள்ள 12 அடி அகலம் மட்டும் பாதை உள்ளதால் தார்சாலை அமைக்கும் இயந்திரம் செல்ல இயலாதநிலை ஏற்பட்டதால் மேற்படி தார்சாலை அமைக்கும்பணி செய்திட வழிவகை இல்லை என்பதைக் குறிப்பிட்டு, அதற்குப் பதிலாக பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்திவரும் பேரூராட்சிக்குச் சொந்தமான சாலையில் 120 மீட்டர் தார்சாலை அமைக்கப்பட்டு திட்டப்பணிகள் செய்து முடிக்கப்பட்டதென்றும் பணி நிறைவுப் பட்டியல் தருமபுரி மண்டல செயற்பொறியாளரால் மேலொப்பம் செய்யப்பட்ட பின்னர் ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை காசோலை மூலம் வழங்கப்பட்டதென்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் எந்த இடத்தில் மாற்று சாலை அமைக்கப்பட்டது என்கின்ற விபரம் மற்றும் அதற்கு உரிய ஆணை உயர் அலுவலர்களிடம் பெறப்பட்டதா என்பதையும் குறிப்பிடவில்லை. அளவீட்டுப்புத்தகத்தில் (M-Book) கல்ஒட்டர்

தெருவில் தார்சாலை போடுவதற்கு பதிலாக மாற்றுப்பணி நடந்ததற்கான பதிவும் அளவீட்டுப் புத்தகத்தில் (M–Book) பதிவு செய்யப்படவில்லை. எனவே பேரூராட்சிகளின் இயக்குநர் நிலையில் கல்ஒட்டர் தெருவில் தார்சாலை அமைக்க ஆணை பெறப்பட்டு, பின்னர் அவர்அளவில் திருத்திய ஆணை பெறப்படாமல், மாற்று இடத்தில் பணி செய்யப்பட்டு, தொகை வழங்கப்பட்டது என சம்பந்தப்பட்ட செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளதை ஏற்க இயலாது. கல் ஒட்டர் தெருவில் சாலை அமைப்பது குறித்து பேரூராட்சி இளநிலை பொறியாளர் மேற்காணும் தெருவில் நேரடியாக களஆய்வு செய்து, மேற்படி இடத்தில் தார்சாலை அமைக்கும் இயந்திரத்தின் மூலம் அத்தெருவில் பணி செய்ய முடியுமா என்பதை குறித்து ஆராயாமல் பொறுப்பற்ற நிலையில் பணிபுரிந்துள்ள இளநிலை பொறியாளரது தொழில் நுட்ப திறமையின்மையை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது. தார்சாலை அமைக்க இயலாத இடத்தில் தார்சாலை பணி அமைப்பது குறித்து பதிவு அளவீட்டுப் புத்தகத்தில் (M.Book) செய்யப்பட்டுள்ளது மூலம் இளநிலை பொறியாளரால் ஆவணங்கள் முறைகேடாக கையாளப்பட்டுள்ளது என்பது தெளிவாகக் காட்டுகிறது. மேலும் பேரூராட்சிகள் இயக்குநரின் அனுமதியின்றி மாற்று இடத்தில் தார்சாலையினை அமைத்துள்ளது இளநிலை பொறியாளரின் கடமை தவறிய, விதிமீறிய செயலாகும். இவ்வாறு விதிகள் மீறி அடிப்படை தொழில் நுட்பமின்றி செயல்பட்டுள்ள பேரூராட்சி இளநிலை பொறியாளர் தனது பதவிக்கு தகுதி உடையவரா? என்கிற ஐயம் எழுகின்றது. இளநிலை பொறியாளர் தனது குற்றத்தினை தவிர்த்திடும் பொருட்டு இம்முறைமன்ற நடுவ விசாரணையிலும் ஆஜராகாமல் பொறுப்பற்ற நிலையில் நடந்து கொண்டுள்ளார். பேரூராட்சி செயல் அலுவலரும் மற்றும் இளநிலை பொறியாளரும் போலியான பட்டியலை தயாரித்து தொகை வழங்கப்பட்டதன் மூலம் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பொறுப்பற்ற முறையில், விதிமீறி நடந்து கொண்ட கெங்கவல்லி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இளநிலை பொறியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்ய முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை 45 நாட்களுக்குள் இம்முறைமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறும் பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

This is tantamount to sheer abuse of powers by the Executive Officer and the Engineer concerned who laid the Black Topping somewhere instead of the selected street. The Engineer concerned had not inspected the area before hand to ascertain the feasibility of laying of Black Topping on the Section and instead chosen to substitute the work in some other area without the written approval of the higher authorities or atleast ratification. This exposes the technical and administrative failure of the Executive Officer and Engineer concerned who were incharge of the work.

Hence the Director of Town Panchayats is directed to frame charges against the Executive Officer and the Engineer who dealt with the execution. The Forum condemns the attitude and conduct of the Engineer who defaulted in appearing before this Forum citing health issues by the Executive Officer but who is very much on duty in his jurisdictions. This is

wilful, wanton and mischievous. Additional charges should be framed aginst the Junior Engineer for this blatant lapse and technical incompetence The Executive Officer's blind support to the Junior Engineer raises suspicion about the Executive Officer's impartiality, credibility and neutrality.

2023–ஆம் ஆண்டு, ஜூன் 06–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. இரா. இளவரசு,
த/பெ. இராமசந்திரன்
167/d. ஆத்தூர் மெயின் ரோடு,
கெங்கவல்லி அஞ்சல்–636105
சேலம் மாவட்டம்

2) செயல் அலுவலர்,
கெங்கவல்லி பேரூராட்சி,
சேலம் மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.அர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.